பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**19 04 2026** **7 15**

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தென்கொரிய அதிபர் திரு. **Lee Jae Myung** அரசுமுறைப் பயணமாக இன்று இந்தியா வருகிறார்.

2. காசியாபாத் - சீதாபூர் மற்றும் ராஜமுந்திரி - விசாகப்பட்டினம் இடையே பல்தட ரயில் வழித்தடம் அமைப்பதற்கான திட்டங்களுக்கு பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

3. மேற்குவங்க மாநிலத்தில் சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி தொழில்நுட்பம் அடிப்படையிலான கண்காணிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்டுள்ளதாக தேர்தல் தெரிவித்துள்ளது.

4. யுக்ரைனின் கிவ் மாகாணத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 6 பேர் உயிரிழந்தனர்.

5. இந்தியா - தென்னாப்பிரிக்கா அணிகளுக்கிடையேயான இரண்டாவது மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி டர்பனில் இன்று நடைபெறுகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

தென்கொரிய அதிபர் திரு. **Lee Jae Myung** அரசுமுறைப் பயணமாக இன்று இந்தியா வருகிறார்.

அவரது மனைவி, அமைச்சர்கள் மற்றும் உயரதிகாரிகள் கொண்ட பிரதிநிதிகள் குழுவும் அவருடன் இந்தியா வருகின்றனர்.

அவரது இந்தப் பயணத்தின்போது பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்தித்து கப்பல் கட்டுமானம், வர்த்தகம், முதலீடு, செயற்கை நுண்ணறிவு, செமிகண்டக்டர் உற்பத்தி, முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பம், மக்கள் தொடர்பு, கலாச்சாரம் உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து பேச்சு நடத்துவார் என்று வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேலும் இரு தலைவர்களும் பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்களில் பரஸ்பரம் நலன் சார்ந்த அம்சங்கள் குறித்து தங்களது கருத்துகளை பரிமாறிக்கொள்கின்றனர்.

முதல் முறையாக இந்தியாவில் பயணம் மேற்கொள்ளும் தென்கொரிய அதிபருக்கு பிரதமர் மதிய விருந்து அளிக்கிறார்.

இதனையடுத்து திரு. Lee Jae Myung குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் ஆகியோரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

<<<<>>>>

காசியாபாத் - சீதாபூர் மற்றும் ராஜமுந்திரி - விசாகப்பட்டினம் இடையேயான மூன்றாவது மற்றும் நான்காவது ரயில் வழித்தடம் அமைப்பதற்கான திட்டங்களுக்கு பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திற்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், இத்திட்டம் 24 ஆயிரத்து 815 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட உள்ளதாக கூறினார்.

இதன் மூலம் உத்தரப்பிரதேச மற்றும் ஆந்திரப்பிரதேச மாநிலங்களைச் சேர்ந்த 15 மாவட்டங்கள் பயனடையும் என்று அவர் கூறினார்.

தடையற்ற ரயில் போக்குவரத்தை உறுதி செய்யும் வகையில் பல்தட ரயில் வழித்தடங்கள் அமைப்பதற்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<>>>>

செயற்கை நுண்ணறிவு நிர்வாகம் மற்றும் பொருளாதார குழுவின் செயல்பாடுகளுக்கு உதவிடும் வகையில் கொள்கை மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவம் கொண்ட குழு ஒன்றை மத்திய அரசு அமைத்துள்ளது.

கொள்கைகளை வரையறை செய்வது, ஒழுங்குமுறை நெறிமுறைகளை மதிப்பீடு செய்வது மற்றும் சர்வதேச அமைப்புகளில் செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான இந்தியாவின் பங்களிப்பு போன்ற அம்சங்களில் இக்குழு தனது பரிந்துரைகளை வழங்கும் என்று மத்திய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கல்வி நிறுவனங்களின் ஆராய்ச்சியாளர்கள், தொழில்நுட்ப தொழில்துறை மற்றும் டிஜிட்டல் துறையில் நிபுணத்துவம் பெற்ற நபர்கள் இந்த நிபுணர் குழுவில் இடம்பெறுவர் என்று அந்த அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த நிபுணர் குழு கொள்கைகளை வகுப்பதில் உத்திசார் யோசனைகளை அரசுக்கு பரிந்துரைக்கும் என்றும், தொழில்நுட்ப மற்றும் கொள்கைகளை வகுப்பதற்கான குழு அதன் செயலாக்கத்தில் முழு கவனம் செலுத்தும் என்றும் அந்த செய்திக்குறிப்பு மேலும் தெரிவிக்கிறது.

<<<<>>>>

சண்டைநிறுத்த ஒப்பந்தம் குறித்து அமெரிக்க வழங்கியுள்ள புதிய முன்மொழிவுகளை பரிசீலித்து வருவதாக ஈரான் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்நாட்டின் தலைமை தேசிய பாதுகாப்புக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் அமெரிக்கா தெரிவித்து வரும் கூடுதல் கோரிக்கைகளை தவிர்த்து நடைமுறைக்கு சாத்தியமான அம்சங்களுடன் கூடிய பேச்சுவார்த்தைக்கு முன்வர வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதனிடையே ஹோர்முஸ் நீரிணை பகுதியில் அமெரிக்க கடற்படை முற்றுகையிட்டுள்ளது சண்டைநிறுத்தம் தொடர்பான பேச்சுவார்த்தைக்கு

எதிரானது என்றும், கடற்படை முற்றுகையை விலக்கிக்கொள்ளாத வரை ஹோர்முஸ் நீரிணையை பயன்பாட்டுக்காக மீண்டும் திறப்பது இயலாது ஒன்று என்று அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

<<<<>>>>

யுக்ரைனின் கிவ் மாகாணத்தில் உள்ள HOLOSIIVSKYI-ல் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 6 பேர் உயிரிழந்தனர். 14 பேர் காயமடைந்தனர்.

58 வயதுடைய நபர் ஒருவர் வீதியில் சென்றுகொண்டிருந்தவர்கள் மீதும், பின்னர் அங்குள்ள பல்பொருள் அங்காடியிலும் தொடர்ந்து துப்பாக்கிச் சூடு நடத்தியதாக அந்நாட்டு காவல்துறையினர் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் காவல்துறையினர் நடத்திய பதில் தாக்குதலில் துப்பாக்கிச் சூடு நடத்திய மர்ம நபர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

தற்போது அங்கு நிலைமை கட்டுக்குள் இருப்பதாக அந்நாட்டு அதிபர் திரு. வோலோடிமிர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மேற்குவங்க மாநிலத்தில் சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி தொழில்நுட்பம் அடிப்படையிலான கண்காணிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்டுள்ளதாக தேர்தல் தெரிவித்துள்ளது.

வாக்குப்பதி சுதந்திரமாகவும், வெளிப்படையாகவும், எவ்வித அசம்பாவிதங்கள் இன்றி நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில் பல்வேறு புதிய நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வாக்குப்பதிவின்போது அனைத்து நிகழ்வுகளையும் பதிவு செய்யும் வகையில் மாநில காவல்துறையினர் மற்றும் மத்திய

பாதுகாப்புப் படையைச் சேர்ந்த தேர்தல் நுண் பார்வையாளர்களுக்கு உடலில் பொருத்திக்கொள்ளக்கூடிய கேமராக்களை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக அந்த ஆணையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே மேற்குவங்கத்தில் உள்ள ஒவ்வொரு வாக்குச்சாச்சவடிகளிலும் எல்லைகள் வரையறுக்கப்படும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இந்த வரையறுக்கப்பட்ட பகுதிக்குள் வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ள வாக்காளர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும் என்றும், பல்வேறு கட்ட சரிபார்ப்பு நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டு பாதுகாப்பு வலுப்படுத்தப்படும் என்று அந்த ஆணையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் அம்மாநிலத்தில் உள்ள 152 சட்டப்பேரவைத் தேர்தலுக்கான முதற்கட்ட வாக்குப்பதிவிற்கான பிரச்சாரம் நாளை மறுநாள் நிறைவடைகிறது.

இதையடுத்து பல்வேறு அரசியல் கட்சிகள், வேட்பாளர்களுக்கு ஆதரவாக தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

இனி தேர்தல் களம்...

**(சவுண்ட் பைட் - மியூசிக் - 15 செகண்ட்ஸ்)**

**தமிழக சட்டப்பேரவை தேர்தலையொட்டி, தொகுதி வாரியாக எமது செய்தியாளர் வழங்கும் இந்த தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது கோவை மாவட்டத்திற்கு உட்பட்ட 5 தொகுதிகள்.**

**(வாய்ஸ் பைட் - தொகுப்பு - 148 செகண்ட்ஸ்)**

**<<<<>>>>**

**இந்தியா - தென்னாப்பிரிக்கா அணிகளுக்கிடையேயான இரண்டாவது மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.**

**டர்பனில் இப்போட்டி இன்று மாலை 5.30 மணிக்குத் தொடங்குகிறது.**

**----------**

**ஐ.பிஎல் கிரிக்கெட் போட்டியில், ஹைதராபாத் அணி 10 ரன் வித்தியாசத்தில் சென்னை அணியை வென்றது.**

**இன்று நடைபெறும் போட்டியில், கொல்கத்தா அணி, ராஜஸ்தான் அணியை எதிகொள்கிறது.**

கொல்கத்தாவில் இப்போட்டி பிற்பகல் **3.30** மணிக்குத் தொடங்குகிறது.

மற்றொரு போட்டியில், பஞ்சாப் அணி, லக்னோ அணியை எதிர்கொள்கிறது.

**<<<<The End>>>>**